
# தொழிலாளர் நலன் மற்றும்
# திறன் மேம்பாட்டுத் துறை



மானியக் கோரிக்கை
எண்.32



## அறிவிப்புகள் 2023 - 2024

**சி.வி.கணேசன்**

தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண்.32

## அறிவிப்புகள்
## 2023 – 2024

**சி.வி. கணேசன்**
தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

1) 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மூக்குக் கண்ணாடி உதவித்தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மூக்குக் கண்ணாடி உதவித் தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் சுமார் 550 பதிவு பெற்ற தொழிலாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயன் பெறுவார்கள்.

2) 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள், தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு 25 ஆயிரம் ரூபாயும், பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு 50 ஆயிரம் ரூபாயும் ஊக்க உதவித்தொகையாக வழங்கப்படும்.

18 அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள், உரிய அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் தேசிய அளவில் பங்கேற்கும் பொழுது பங்கேற்கும் ஆண்டில் ஒருமுறை மட்டும் 25 ஆயிரம் ரூபாயும், பன்னாட்டளவில் பங்கேற்கும் பொழுது பங்கேற்கும் ஆண்டில் ஒரு முறை மட்டும் 50 ஆயிரம் ரூபாயும் ஊக்க உதவித் தொகையாக வழங்கப்படும்.



3) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள், தகுதியின் அடிப்படையில் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் (எம்.பி.பி.எஸ்.) சேர்க்கை பெறும் பொழுது கல்விக் கட்டணம், தங்கும் விடுதி முழுக்கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவுக்காக ஒவ்வொரு ஆண்டும் 50 ஆயிரம் ரூபாயும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள், தகுதியின் அடிப்படையில் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் (எம்.பி.பி.எஸ்.) சேர்க்கை பெறும் பொழுது கல்விக் கட்டணம், தங்கும் விடுதி முழுக் கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவுக்காக ஒவ்வொரு ஆண்டும் 50 ஆயிரம் ரூபாயும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும். இதனால், சுமார் 35 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

4) தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித்தொகை 1.25 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில் அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித்தொகை 1.25 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.



5) புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் உயிர் இழக்க நேரிட்டால் அவர்களின் உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் நிதியுதவி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் வாழும் கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் உயிர் இழக்க நேரிட்டால் அவர்களின் உடலை, உடல் கூராய்வுக்கு பின்னர் மருத்துவமனையிலிருந்து அரசு அமரர் ஊர்தி மூலம் சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்காக ஏற்படும் செலவினம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக வழங்கப்படும்.

புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள், பணியிடத்தில் விபத்தினால் உயிர் இழக்க நேரிட்டால் அவர்களின் உடலை, உடல் கூராய்விற்கு பின்னர், அரசு அமரர் ஊர்தி / தொடர்வண்டி மூலம் எடுத்துச் செல்ல ஆகும் தொகையும், ஆகாய விமானம் மூலம் சொந்த ஊருக்கு எடுத்து செல்வதெனில் அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் வழங்கப்படும்.

6) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 60 வயதுக்குட்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில், தீவிர நோய் பாதிப்பு நலத்திட்ட உதவித்தொகையாக ஆண்டொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் முதற்கட்டமாக மூன்றாண்டுகளுக்கு அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற 60 வயதுக்குட்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை, டயாலிசிஸ், புற்றுநோய், ஆஸ்துமா (Moderate and Severe Persistant), சிலிக்கோசிஸ் மற்றும் பக்கவாதம் ஆகிய தீவிர நோய்களால் பாதிக்கப்பட்டு பணி செய்ய இயலாமல் சிகிச்சை மேற்கொண்டு வரும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, தீவிர நோய் பாதிப்பு நலத்திட்ட உதவித்தொகையாக ஆண்டொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் முதற்கட்டமாக மூன்று ஆண்டுகளுக்கு அறிமுகப்படுத்தப்படும்.



இந்நிதியுதவியானது 6 மாதங்களுக்கு ஒரு முறை விடுவிக்கப்படும்.

இதற்கென ஆண்டுக்கு 60 இலட்சம் ரூபாய் வீதம் மூன்றாண்டுகளுக்கு 1.80 கோடி ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும். இத்திட்டத்தினால் சுமார் 1,500 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

7) தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்கள் பணியின்போது விபத்து மரணம் அடையும் நேர்வில் 5 இலட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்கள் பணியின்போது விபத்து மரணம் அடையும் நேர்வில், அவர்களது குடும்ப நலன் கருதி 5 இலட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்படும்.

இதற்கான உத்தேச செலவினம் 25 இலட்சம் ரூபாய் ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.



8) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 4,000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்ட்ரீசியன் ஆகிய கட்டுமானப் பணிகளில் புதிதாக ஈடுபட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களில் ஆண்டொன்றுக்கு 1,000 நபர்களுக்கு திறன் பயிற்சி ஆகியவை 4.74 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் அளிக்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள், அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 4,000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்ட்ரீசியன் ஆகிய கட்டுமானப் பணிகளில் புதிதாக ஈடுபட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற

தொழிலாளர்களில் ஆண்டொன்றுக்கு 1,000 நபர்களுக்கு திறன் பயிற்சி அளித்தல் ஆகியவை தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் 4.74 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.



**9) 1950, 1960 மற்றும் 1970-ஆம் ஆண்டுகளில் துவக்கப்பட்ட 27 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 18.70 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.**

1950, 1960 மற்றும் 1970-ஆம் ஆண்டுகளில் துவக்கப்பட்ட 27 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும், திறன் பயிற்சி பெறுவதற்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்கிடவும் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 18.70 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

## 10) 25 இலட்சம் ரூபாய் செலவில் அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களின் திறன் மேம்பாட்டினை அதிகரித்தல்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் கருத்தியல் பயிற்சியினை விட செய்முறை பயிற்சியே முக்கியத்துவமாக உள்ள நிலையில் தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்படும் நவீன தொழில்நுட்ப மாறுதல்களுக்கேற்ப பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டும், நவீன கற்பித்தல் உத்திகள், தொழிற்சாலைகளின் நவீன போக்கு, நவீன தொழில்நுட்பங்கள் போன்றவற்றில் முன்னணி தொழிற்சாலைகள் மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் 100 பயிற்றுநர்களுக்கு 6 வார கால அளவில் 25 இலட்சம் ரூபாய் செலவில் அறிவுத்திறன் பயிற்சி அளிக்கப்படும்.



## 11) கட்டுமானப் பணியிடங்களில் பாதுகாப்பாக பணிபுரிவது தொடர்பான காணொளிக் காட்சிகள் (Videos) 30 இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்படும்.

கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக பணிபுரிவது தொடர்பான செயல்முறைகள் குறித்து, உடையக்கூடிய கூரையில் பாதுகாப்பாக பணிபுரிவது உள்ளிட்ட 3 விழிப்புணர்வு காணொளிக் காட்சிகள் (Videos) தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் 30 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து தயாரிக்கப்படும்.

**12) தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த குறும்படம் 10 இலட்சம் ரூபாய் செலவில் தயாரித்து வெளியிடப்படும்.**

சமீப காலமாக தொழிற்சாலைகளில் குறுகிய இடத்தில் (Confined Space) பணிபுரிவது போன்றவை விபத்துகள் ஏற்படுத்தக்கூடிய காரணியாக உள்ளது. அறியாமையால், பாதுகாப்பு அம்சங்கள் தொழிலாளர்களால் புறக்கணிப்படுவதன் காரணமாக ஏற்படும் விபத்துகளை குறைக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 10 இலட்சம் ரூபாய் செலவில் குறும்படம் தயாரித்து வெளியிடப்படும்.



**13) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் செயல்படும் தொழில் சுகாதார ஆய்வகம் மேம்படுத்தப்படும் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான மருத்துவ கருவிகள் கொள்முதல் செய்யப்படும்.**

தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடு மேற்கொள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் இயங்கி வரும், தொழில் சுகாதார ஆய்வகம் தற்போது உள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப மேம்படுத்தப்படும். மேலும், அபாயகரமான செயல்முறை தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல்நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மருத்துவ அலுவலர்களின் உபயோகத்திற்கென மருத்துவ கருவிகள் கொள்முதல் செய்யப்படும். இவற்றிற்காக 19.50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

14) அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மயக்கமருந்தியல், காது, மூக்கு, தொண்டை மருத்துவம் மற்றும் குழந்தை மருத்துவம் ஆகிய பிரிவுகளில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு பிறகான இரண்டு ஆண்டு பட்டயப்படிப்புகள் 1.23 கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும்.

நேசனல் போர்டு ஆப் எக்சாமினேசன் இன் மெடிகல் சயின்ஸ் (NBEMS) அமைப்பால் நடத்தப்படும், எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு பிறகான இரண்டு ஆண்டு பட்டயப்படிப்புகள் NBEMS-DIPLOMA மயக்கமருந்தியல், காது, மூக்கு, தொண்டை மருத்துவம் மற்றும் குழந்தை மருத்துவம் ஆகிய பிரிவுகளில், அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 1.23 கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும்.

**சி.வி. கணேசன்**
தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்